மீது குற்றம் சாட்டினர். அந்தத் தொழிலாளி அந்த இரவு அந்த மருத்துவமனை வெளியார் பகுதியில் தன்னுடைய கழுத்தைத் தானே அறுத்துக்கொண்டு கிடந்தார். மருத்துவ மனையில் அதைக் கண்டவர் கள் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அறுவைக் கூடத்திற்கு எடுத்துச் செல்லும்போது, அந்தத் தொழிலாளி இறந்துவிட்டார். அவர் மனம் உடைந்துபோய் இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம் அந்த டாக்டர் தான் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்கிறது. 14-10-69-ல் அதற்காக வேலை நிறுத்தம் செய்தார்கள். டீன் தலையிட்டு நடவடிக்கை எடுப்பதாகக் கூறி சமாதானம் செய்திருக்கிறார். டாக்டர் கபீர் என்பவரை விசாரணை அதிகாரியாக நியமித்து விசாரணை செய்யப் பட்டது. உடனே அந்த குருசாமி என்ற டாக்டர் மருத்துவப் பகுதி யிலிருந்து கல்லூரிப் பகுதிக்கு மாற்றப்பட்டு விசாரணை செய்யப்பட்டது. அந்த விசாரணையின் அறிக்கை அரசாங்கத்தின் பரிசீலனையில் வந்திருக் கிறது. அதன் பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Private Polytechnics

*73. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the pattern of assistance given to private Polytechnics by the Government ; and

(*b*) whether any representation has been received from such Polytechnics requesting for increase in such assistance ?

தனியார் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன் :

(அ) தனியார் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்கு அரசு எவ்வகை உதவியை அளித்து வருகிறது ?

(இ) அவ்வாறு அளிக்கப்படும் உதவியை மேலும் அதிகரிக்க வேண்டி அந்த பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) மத்திய அரசின் உதவி கிடைக்கப்பெறும் ஐந்தாண்டு காலம் வரை நிகர பற்றுக்குறை யில் தொடரும் செலவினத்தில் 25 சதவீதமும் தொடரா செலவினத் தில் 25 சதவீதமும் உதவியாக கொடுக்கப்படுகிறது. இந்த முதல் ஐந்தாண்டு காலத்திற்கு தொடரும் செலவில் 50 சதவீதம் தொடரா செலவில் 50 சதவீதம் என்ற அடிப்படையில் மத்திய அரசு உதவி யளிக்கிறது. மத்திய அரசின் உதவி நிறுத்தப்பட்டபின் மாநில அரசு நிகர பற்றுக்குறையில் 75 சதவீதம் உதவியளிக்கிறது.

(இ) ஆம்.

திரு. எம். எத்திராஜுலு : தனியார் பாலிடெக்னிக் பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

8th September 1970]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய முழுக் குறிப்பும் இங்கில்லை. ஆயினும் மாநிலம் முழுவதும் தனியார் துறையிலும் அரசாங்கத் துறையிலுமாக மொத்தம் 33-க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தனியார் பாலிடெக்னிக் பயிற்சிப் பள்ளிகளில் இவ்வாண்டு பல இடங்கள் காலியாக இருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால், எங்கெங்கே எவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தக் காலியாக உள்ள இடங்களை நிரப்புவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சில பெரும் நகரங்களிலுள்ள பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் தற்போது இடம் காலியில்லை. ஆனால் கிராமப் புறங்களில் இருக்கும் சில பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் மட்டுமே இடங்கள் காலியாக இருக்கின்றன. ஏற்கெனவே பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேருவதற்கு 'ஏ' வாங்க வேண்டும்—அதாவது 120 எண்கள் வாங்கியிருந்தால்தான் சேர்த்துக்கொள்ளலாம் என்றிருந்ததை 110 ஆகக் குறைத்தோம். பிறகு இந்த ஆண்டு 110 என்றிருந்ததைக்கூட 100 வாங்கியிருந்தால் போதும் என்று குறைத்தோம். இப்போது 100 என்பதுகூட குறைக்கப்பட்டு, 90 எண்கள் இருந்தாலும் போதும், சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அப்படியிருப்பினும் கூட சில குறிப்பிட்ட இடங்களில் இன்னும் பல ஸ்தானங்கள் காலியாக இருக்கின்றன. அதுபற்றிய விவரக் குறிப்பு ஏதும் தற்போது கையிலில்லை. அதைக் கூட கணக்கெடுக்கும் படிக் கேட்டிருக்கிறேன். அதோடு எந்தெந்த வேலைக்கான பயிற்சி பெற்றவர்களுக்கு தேவை அதிகமாக இருக்கிறது என்றும் மாணவர்களில் பெரும்பாலோர் எந்தெந்த வேலைகளை விரும்புகிறார்கள் என்றும் கணக்கெடுத்து அப்படிப்பட்ட பகுதிகளையே நிறையப் புகுத்த என்ன முயற்சிகள் மேற்கொள்ளலாம் என்பதையும் கண்டறிந்து அவைகளைச் செயல்படுத்தும் குறிப்பும் இருக்கிறது. சென்ற ஆண்டு இருந்த காலியிடங்களைக் காட்டிலும் இந்த ஆண்டு 'பரவாயில்லை' என்கிற அளவுக்குக் காலியிடங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. அதிகமான மாணவர்கள் இந்த ஆண்டு சேர்ந்திருக்கிறார்கள். எந்த எந்த ஊர்களில் எவ்வளவு காலியிடங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : பாலிடெக்னிக்குகளிலிருந்து படித்து வெளியே வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை என்பதால், பாலிடெக்னிக்குகளில் பயிற்சி பெற வரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்று ஒரு பொதுவான கருத்து நிலவுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? எவ்வாறு மெடிகல் காலேஜ் அட்மிஷனைக் குறைக்கலாமா என்று பரிசீலனை செய்யப்படும் என்று அரசாங்கம் உத்திரவாதம் கொடுத்திருக்கிறதோ, அதே முறையில் என்ஜினீயரிங் கல்லூரிகள், இன்னும் இப்படிப்பட்ட பாலிடெக்னிக்குகளில் உள்ள மாணவர்களின் இடங்களைக் குறைத்தல்பற்றி—குறைந்த பட்சம் இந்த

மாதிரிப் பயிற்சி பெற்றவர்களிடம் வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாத நிலையை உருவாக்க மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து — அரசாங்கம் ஆலோசிக்கும் என்று தற்காலிகமாகவாவது உத்திரவாதம் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அச்சம் ஓரளவுக்கு அரசாங்கத்திற்கும் இருந்து வருகிறது. ஆனால் 2 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த தொழில் மந்த நிலை இப்போது ஓரளவுக்கு நீங்கும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணமாக, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும் நிலைமை இருக்கிறது. 5-வது ஐந்தாண்டுத் திட்டம் முறைப்படி மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் பல்வேறு துறைகளும் தங்கள் தங்கள் துறையைச் சார்ந்த புதிய தொழில்களை ஆரம்பிக்கும்போது, இப்படிப்பட்ட பாலிடெக்னிக்குகளில் படித்து வெளியேறும் மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்பட்ட மந்த நிலைமை சீர்பட்ட பிறகு, படித்த பாலிடெக்னிக் மாணவர்களை வேலைக்கு ஈர்த்துக் கொள்ளுகிற வாய்ப்பு அதிகமாகும் நிலைமை இருந்து வருகிறது. ஆகவே என்ஜினீயரிங் காலேஜ்களைப் பொறுத்த வரையிலாவது ஓரளவுக்கு நாம் தற்போது மாணவர்கள் சேர்க்கும் எண்ணிக்கையைக் குறைத்து வருகிறோம். இது சென்ற இரண்டு வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு ஏறக்குறைய 400 முதல் 500 இடங்கள் வரையிலும் என்ஜினீயரிங் கல்லூரிகளில் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதையே கூட 30 சதவீதம் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசிலிருந்து சொல்லப்பட்டது. அப்படியே நாம் குறைத்தாலும்கூட, அதன் விளைவு 5 ஆண்டுக் காலம் கழிந்த பிறகு தான் நம்மால் உணர்ந்து அனுபவிக்க வேண்டியிருப்பதால், அந்த அளவுக்கு இடங்களில் எண்ணிக்கையைக் குறைக்காமல், அதிகமாக இட நெருக்கடி இருக்கிற இடங்களில் மட்டும் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, மற்ற இடங்களில் எண்ணிக்கையைக் குறைத்திருக்கிறார்கள். இதிலும் அந்தத் துறையினர் ஆராய்ந்து அறிவிக்கிற வகைப்படி, சில இடங்களில் குறைத்து வேறு துறைக்கு அவைகளை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்படி மாற்றலாம் என்றும் இருக்கிறது. இப்போது முக்கியமாகப் பெரு நகரங்களில் இருக்கிற பாலிடெக்னிக்குகளில் இருந்து படித்துவிட்டு வெளியேறுகிற மாணவர்களைப் பொறுத்த வரையில், காலை $4\frac{1}{2}$ மணியிலிருந்து 5 மணி முதல் 8—8 $\frac{1}{2}$ மணி வரையிலும் அந்தந்தப் பாலிடெக்னிக்குகளில் இருக்கிற மெஷின்களை ஒரு மணிக்கு 5 பைசா, 10 பைசா, 15 பைசா என்று மெஷின்களின் தகுதிக்குத் தகுந்தாற்போல் வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அவைகளை மாலையில் 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டார்கள். இந்த முறை மதுரையில் வெற்றிகரமாகப் பரிட்சார்த்தமாக நடைபெற்று அதன் மூலம் மாணவர்கள் மாதம் 100, 150, 200 ரூபாய் வரை சம்பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அதிலிருந்து அவர்கள் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் தனியாக ஒரு தொழிலை வைத்துக்கொள்ள இது ஒரு தூண்டுகோலாக இருக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதால், இந்தத் திட்டத்தை மற்றப் பெரு நகரங்களுக்கும் விஸ்தரிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுத்

கொண்டிருக்கின்றன. மேலும் பாலிடெக்னிக்குகளில் முதலாண்டு படிக்கிறவர்கள் இரண்டாவது ஆண்டு வகுப்பிற்குப் போனாலும் போக லாம் அல்லது பி.எஸ்ஸிக்கும் போகலாம் அல்லது என்ஜினீயரிங் கோர் ஸுக்கும் விண்ணப்பம் செய்யலாம் என்று வாய்ப்பு ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. ஆண்டுக்காண்டு இருக்கிற நிலைமைகளைக் கண்டறிந்து இடங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமா, இல்லையா என் பதைத் தீர்மானிக்க வேண்டும். இப்போது இருக்கிற நிலைமையிலேயே 4வது ஐந்தாண்டுத் திட்ட காலத்து வேகத்தின் அளவுக்குச் சமாளிக்க முடியுமா என்பதைப்பற்றி அடுத்த ஆண்டுதான் தீர்மானிக்க முடியும்.

THIRU S. NARAYANASWAMY : Will the Hon. Minister be pleased to state whether the Government are seriously considering the question of merging some of these mofussil polytechnics because of the poor response from the candidates, in order to strengthen the individual polytechnics, so that better and more purposeful use of the Government funds may be made for the purpose of carrying on these polytechnics and also consider the question of changing the syllabus of these poly-technics so that they may be more job-oriented than they are today ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: நான் முதலில் குறிப்பிட்டபடி, அப்படிப்பட்ட எண்ணமும் அரசுக்கு உண்டு. பக்கத் தில் இருக்கிற இரண்டொரு பாலிடெக்னிக்குகளை இணைப்பதன் மூலம் ஓரளவுக்கு அனுகூலம் ஏற்படும் என்றால், அதுபற்றி யோசிக்கும்படியாக வும், பரிசீலிக்கும்படியாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. தற்போது காரைக்குடியில் ஒரு பாலிடெக்னிக்கும், செட்டிநாட்டில் ஒரு பாலிடெக் னிக்கும் இயங்கி வருகின்றன. இவ்வாண்டு செட்டிநாடு பாலிடெக்னிக் கில் 9 மாணவர்களோ 12 மாணவர்களோதான் சேர்ந்ததாகத் தெரிகி றது. அப்படியிருக்கும்போது, காரைக்குடி பாலிடெக்னிக்கோடு செட்டி நாடு பாலிடெக்னிக்கை இணைத்து, தேவையான பகுதிகளில் மட்டும் இடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொள்ளலாம், அல்லது தேவையான பகுதிகளை மட்டும் இங்கே வைத்துக்கொண்டு, மற்றவை களைக் காரைக்குடி பாலிடெக்னிக்குடன் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேறு பல இடங்களிலும் இப்படி இருக்கிற நிலைமைகளை மாற்றுவதன் மூலமும், எதற்கு மாணவர்கள் அதிகமான விருப்பத்தைக் காட்டுகிறார்களோ, எதற்கு அதிகமான வேலை வாய்ப்பு இருக்கும் என்று மாணவர்கள் நினைக்கிறார்களோ, அந்தப் பகுதிக்கான இடங்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் திட்டம் தீட்டுவதுபற்றிய குறிப்பிருக்கிறது.

திரு. எம். எத்திராஜுலு : தென்னாற்காடு மாவட்டத்தின் தலை நகரான கடலூரில் பல்தொழில் பயிற்சிப் பள்ளி அமைக்க வேண்டும் என்று அதற்கான மாண்புமிகு அமைச்சர் அவர்களேகூட வந்து பார்வை யிட்டும், இது வரையிலும் அந்தப் பயிற்சிப் பள்ளி அங்கே அமைக்கப் படவில்லை. இதன் காரணமாக அங்கே இருக்கிற மாணவர்கள் வேறு மாவட்டங்களுக்குச் சென்று படிக்க வேண்டிய நிலை இருப்பதால், அங்கே சர்க்கார் பல்தொழில் பயிற்சிப் பள்ளி அமைக்க முடியுமா முடியாதா என்றும், அப்படி அரசு பல்தொழில் பயிற்சிப் பள்ளி வைக்க

[8th September 1970

இயலாத நிலையில், தனியார் ஏற்படுத்துகிற பல்தொழில் பயிற்சிப் பள்ளிக்காவது அரசு ஏதாவது உதவி செய்ய முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது நான் இங்கே கூறிய விவரங்களிலிருந்து கடலூரில் ஒரு புதிய பல்தொழில் பயிற்சிப்பள்ளி உருவாவது என்பது அவ்வளவாக சரியாக இருக்காது என்ற காரணத்தால்தான், இப்போது அங்கே ஏற்படுத்துவது கூட நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் கூட ஏ.வி. மெய்யப்பன் டிரஸ்ட் மூலமாக ஒரு பல்தொழில் பயிற்சிப் பள்ளியும், கோத்தாரி மூலமாக இன்னொரு பயிற்சிப் பள்ளியும் ஏற்படுத்தத் திட்டமிட்டு, இவையிரண்டுமே இப்போது ஏற்பட்டிருக்கிற நிலைமையை ஒட்டி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. வேறு பல இடங்களில் நிறைய ஸ்தானங்கள் காலியாக இருப்பதால், புதிதாகப் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்துவது என்பது இப்போது தேவையற்றதாகக் கருதப்படும். எதிர்காலத்தில் தேவைப்படுமானால், காலம் கனிகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்து கவனிக்கப்படலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, the Hon. Minister mentioned that certain courses which would be job-oriented would be started in the polytechnics. May I know, Sir, whether the Government would consult Industry also in this regard and not leave it to the Director of Technical Education alone to decide what courses could be started in these polytechnics which would be job-oriented ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட தொடர்பு வைத்துக்கொண்டுதான் ஒரு முடிவு எடுக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதே கூட என்னென்ன தொழில்களுக்கு ஆட்கள் தேவைப்படுகிறார்கள் என்று அவர்களைக் கலந்து எப்படிப்பட்ட தொழில் நுணுக்கம் உள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள் என்று கணக்கெடுத்து, அதன் அடிப்படையில் தான் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகிறோம். இதிலும் அவர்களோடு கலந்து உரையாடி முடிவெடுக்கும் நிலை இருக்கும். ஏனென்றால் ''டைரக்டர் ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன்'' மட்டுமே இதனுடைய உண்மையான சூழ்நிலையை அறிந்து முடிவெடுக்கும் தன்மையில் இருக்க மாட்டார். தொழில் துறையைச் சார்ந்தவர்களையும் கலந்துதான் ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

Suspended Teachers

*74. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the number of teachers suspended from service in Elementary and Higher Elementary Schools in Palladam Panchayat Union during 1968-69 ;

(*b*) the number of such suspended teachers re-instated in service ;